# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி ; காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் இருவர் த.வெ.க. அமைச்சரவையில் இணைந்துள்ளதை, 'வரலாற்றுச் சிறப்பு மிக்க நாள்' என்று காங்கிரஸ் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் பெருமிதப் பட்டிருக்கிறாரே ?

**பட்டணம் :** **ஆமாம் அய்யா; இது இந்திய வரலாற்றுச் சிறப்புமிக்க நாளல்ல; மாறாக ராகுல் தலைமையிலான காங்கிரஸ் வரலாற்றில் சிறப்பு மிக்க நாள்; காரணம் இந்த நாள், அரசியல் அரங்கில், முதுகில் குத்தியதையும், குதிரை பேரத்தையும் அடையாளப் படுத்தும் நாள் !**

---

### தமிழ்நாடு முழுவதும் மின்வெட்டு அதிகரிப்பு!

## த.வெ.க. அரசுக்கு எதிராக பவர்கட் என்ற ஹாஷ்டேக்!

### இந்தியா முழுவதும் டிரெண்டாகியுள்ளது!

சென்னை, மே 24-

தமிழ்நாடு முழுவதும் மின்வெட்டு அதிகரித்துள்ள நிலையில், த.வெ.க. அரசுக்கு எதிராக பவர்கட் என்ற ஹாஷ்டேக் இந்தியா முழுவதும் டிரெண்டாகி உள்ளது.

முதலமைச்சராக விஜய் பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாடு முழுவதும் தினந்தோறும் மணி கணக்கில் மின்வெட்டு நிலவுகிறது. கோடை காலத்தில் ஏற்கனவே மக்கள் வெயிலில் அவதிப்படும் நிலையில், தற்போது மின்வெட்டும் அவர்களுக்கு கடும் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது. தலைநகர் சென்னையிலேயே பலமணிநேரம் மின்வெட்டு நிலவுவதை பார்க்கும் போது, மற்ற இடங்களிலும் கிராமப் புறங்களில் நிலைமை மிக மோசமாக இருப்பதையே காட்டுகிறது. எங்கு பார்த்தாலும் போராட்டங்கள், மின்வாரிய அலுவலக முற்றுகை சம்பவங்கள் நடந்து வருகின்றன. இதனிடையே, சமூக வலைதளங்களிலும் கண்டனக் குரல்களை எழுப்பி வருகின்றனர். இந்திய அளவில் பவர்கட் என்ற ஹாஷ்டேக்கை டிரண்டாக்கி அதில், தவெக அரசு எதிரான ஆதங்கத்தையும், அதிருப்தியையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

---

### தமிழ்நாட்டில் ஜூன் 18

## மாநிலங்களவை இடைத்தேர்தல்!

புதுடெல்லி, மே 24–

தமிழ்நாட்டில் காலியாக உள்ள ஒரு மாநிலங்களவை இடத்துக்கான இடைத்தேர்தல் ஜூன் 18 ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் மயிலம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அ.தி.மு.க.வின் சி.வி.சண்முகம், தனது மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார்.

இந்த நிலையில், காலியானதாக அறிவிக்கப்பட்ட தமிழ்நாட்டின் ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கு ஜூன் 18–ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஜூன் 1–ஆம் தேதி வேட்பு மனுத் தாக்கல் தொடங்குகிறது. ஜூன் 11 வேட்பு மனுவை திரும்பப் பெற கடைசி நாளாகும். ஒருவருக்கு மேல் போட்டியிடும் பட்சத்தில், ஜூன் 18–ஆம் தேதி வாக்குப்பதிவு நடத்தப்பட்டு, அன்று மாலையே முடிவுகள் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 10 மாநிலங்களில் காலியாகும் 24 மாநிலங்களவை இடங்களுக்கான தேர்தலும் ஜூன் 18–ஆம் தேதி நடைபெறுகிறது.

---

### காவிரியின் குறுக்கே மேகதாட்டுவில் அணை: கர்நாடக அரசைக் கண்டித்து

## ஜூன் 2 இல் சென்னையில் அறப்போர் ஆர்ப்பாட்டம்!

### பொதுமக்களுக்கு வைகோ அழைப்பு!

சென்னை, மே 24-

காவிரி நதியின் குறுக்கே மேகதாட்டு எனும் இடத்தில் கர்நாடக அரசு அணை கட்ட திட்டமிட்டு 5,900 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, அணை கட்டுவதற்கான பொருட்களை ஆயத்தப்படுத்தி வருகிறது.

அப்படி அணை கட்டப்பட்டு, 68 டி.எம்.சி. தண்ணீர் அதில் தேக்கப்பட்டால், காவிரி மேலாண்மை ஆணையமும், உச்சநீதிமன்றமும் வழங்கிய தீர்ப்புகளுக்கு விரோதமாக அது அமையும். ஏற்கனவே 15 இலட்சம் ஹெக்டேர் ஏக்கர் பாசனத்தை தமிழ்நாடு இழந்து நிற்கும் நிலையில், மேட்டூர் அணைக்கே தண்ணீர் வராமல், கொள்ளிடமும், கல்லணையும் வறண்டு, தஞ்சை மாவட்டம் உள்ளிட்ட சோழ மண்டலமாம் டெல்டா மாவட்டங்கள் பட்டினிப் பிரதேச மாகும்.



மேகதாட்டுவில் அணை கட்ட 2014 டிசம்பர் 7, 8 தேதிகளிலேய அன்றைய மத்திய அமைச்சர் அனந்தகுமார் அவர்கள் இல்லத்தில் கர்நாடகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சி எம்.பி.க்களும், மத்திய அமைச்சர்களும் கலந்து கொண்டு சதி ஆலோசனை செய்து மேகேதாட்டுவில் அணை கட்டுவதற்கு கர்நாடக அரசுக்கு மறைமுகமாக மத்திய அரசு ஏற்பாடு செய்து கொடுத்த செய்தி இந்து ஆங்கில நாளேட்டில் விரிவாக வெளியிடப்பட்டது.

அதை அறிந்து, காவிரி பாதுகாப்பு இயக்கத்தை அமைத்து, 212 விவசாய அமைப்புக்கள் பங்கேற்ற கூட்டத்தை தஞ்சையில் நடத்தி, சோழ மண்டலம் முழுக்க ஊர் ஊராகச் சென்று மேகதாட்டு அணையால் வரும் ஆபத்தை தஞ்சை மண்டல விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் வரப்போகிற அபாயத்தை எடுத்துக் கூறிய கடமையை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் செய்தது.

தற்போது கர்நாடக மாநில துணை முதலமைச்சர் சிவக்குமார் அவர்கள் மேகதாட்டு அணையைக் கட்டியே தீருவோம் என்று ஆணவத்தோடு அறிவித்திருப்பதால், கர்நாடக அரசைக் கண்டித்தும், மேகதாட்டு அணையைக் கட்ட மத்திய அரசு அனுமதி அளிக்கக் கூடாது என்பதை வலியுறுத்தியும்

வருகிற 2026 ஜூன் 02 ஆம் நாள் செவ்வாய்க் கிழமை அன்று காலை 10 மணி அளவில் மறுமலர்ச்சி திராவிட முன்றேறக் கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி,

மனிதநேய மக்கள் கட்சி, மனிதநேய ஜனநாயகக் கட்சி, சோசியல் டெமாக்ரடிக் கட்சி, மே 17 இயக்கம், தமிழக வாழ்வுரிமைக் கட்சி, தமிழ்ப் புலிகள் கட்சி, தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை, தற்சார்பு விவசாயிகள் சங்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து எனது தலைமையில் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகே மாபெரும் அறப்போர் ஆர்பாட்டம் நடைபெறும்.

இந்த அறப்போர் ஆர்ப்பாட்டத்திற்கு விவசாய பெருமக்களும், வணிகளுர்களும், பொதுநல அமைப்பினரும் நல்லாதரவு தர வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### அரசு மருத்துவமனையில் தவறான சிகிச்சையால்

## திருச்சி நர்சிங் மாணவி பலி!

### தலைமை மருத்துவமனை முன்பு சாலை மறியல் - ஆர்ப்பாட்டம்!

புதுக்கோட்டை, மே 24-

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, தொண்டைமாநல்லூர் அருகே உள்ள மணக்குடி பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் சேட்டு கலைச்செல்வி இவர்களது மகள் சீதா லட்சுமி(19) இருவரும் விவசாய கூலித் தொழிலாளர்கள்.

இவர்களது மகள் சீதா லட்சுமி திருச்சி அரசு மருத்துவமனையில் மூன்றாம் ஆண்டு செவிலியர் படிப்பு படித்து வந்தார். இந்த நிலையில் அவருக்கு மூக்கில் சதை வளர்ந்துள்ளது. இதற்காக அவரை திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் உடனடியாக அவருக்கு சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என கூறினர்.

இதனை அடுத்து அவருக்கு நேற்று முன்தினம் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அப்போது அதிக அளவில் மயக்க மருந்து கொடுத்ததால் அவர் உயிரிழந்ததாக கூறப்படு கிறது.

இதனைத் தொடர்ந்து உறவினர்களும், செவிலியர்ளும் மருத்துவரின் தவறான சிகிச்சையால் சீதாலட்சுமி உயிரிழந்ததாக குற்றம் சாட்டி திருச்சி அரசு தலைமை மருத்துவமனை முன்பு திடீர் சாலை மறியலில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் காவல் துறையினர் குவிக்கப்பட்டு பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் உடனடியாக மாவட்ட ஆட்சியர் மற்றும் மருத்துவமனை முதல்வர் வந்து பேச வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

---

## சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., இ. பரந்தாமன் ஆகியோர் கள ஆய்வு செய்கின்றனர்.

**அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி - 24.05.2026**

| ஒன்றியம்/நகரம்/பகுதி/பேரூர் | நேரம் | நிகழ்விடம் |
|---|---|---|
| அரக்கோணம் நகரம் | காலை 10.00 | அன்னப்பூரணி மஹால், அரக்கோணம் |
| அரக்கோணம் கிழக்கு | | |
| தக்கோலம் பேரூர் | | |
| அரக்கோணம் மத்திய | காலை 12.00 | OTP மஹால், நாகாலம்மன் நகர் |
| அரக்கோணம் மேற்கு | | |
| நெமிலி கிழக்கு | மாலை 4.00 | கலா பாரடைஸ், நெமிலி |
| நெமிலி மத்திய | | |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

---




தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 21 5 2026 காலை சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் தலைமை ஏற்க பேரவை துணைத் தலைவர் போஸ் வெங்கட் செயலாளர் செயலாளர் இறையன்பன் குத்தூஸ் துணைச் செயலாளர்கள் சி. கோபி, ஜாகிர் உசேன், எம்.எஸ். ஹரி பாபு, என்.எஸ். மாதேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

## தலைவன்



பேரறிஞர்
அண்ணாவால்
உதயமான
தி.மு.க. வில்..

ஈ.வி.கே.சம்பத்

நாவலர்
நெடுஞ்செழியன்

என்.வி.
நடராஜன்..

கே.ஏ.
மதியழகன்

கலைஞர்

புரட்சித்தலைவர்

கண்ணதாசன்

அன்பிலார்

நாஞ்சிலார்

என
சாரை சாரையாக
அணிவகுத்த

ஆற்றலாளர்
கூட்டத்தை
ஆயுதமாக்கியது

அண்ணாவின்
சாதுர்ய
நிர்வாகம்..

பேராயக்கட்சி எனப்பட்ட

ஆலவிருட்ச
காங்கிரஸின்

ஆணிவேர்
அசைக்க

அதுவே
பிரதானக் காரணியாகியது..

சூரியனின்
ஒளிக் கதிர்களை
ஓர் புள்ளியில்
குவித்து

காகிதத்தை
பற்றி எரிய
வைக்கிற
குவிலென்ஸ் போல

இந்நாட்டின்

டெமோஸ்தனிஸ் ஆக..
தென்னாட்டின்
இங்கர்சாலாகத்
திகழ்ந்த

காஞ்சித்
தலைவனது
தலைமைப் பண்பே

விடுதலை
வாங்கித் தந்த
காங்கிரஸ்
கட்சிக்கு

தமிழ் நாட்டில்
இருந்தே
விடை கொடுக்க
வைத்தது
என்றால்..

அதற்குக்
காரணம்

தி.மு.க. வை
நோக்கித்
திரண்ட

கூட்டத்தின்
எண்ணிக்கை
மட்டுமே
காரணமல்ல.

ஊர் கூடித்
தேர் இழுக்கும்
என்றாலும்

வடம்பிடித்து
இழுப்பவர்கள்

ஒரு திசையில்
இழுத்தால்
மட்டுமே

தேரோட்டம்
நீரோட்டம் போல நகரும்..

அதுவே

ஆளுக்கொரு
திசையில்
தேரை இழுத்தால்

சேதாரம்
தேருக்கே ஆகும்..
என்பதை
உணர்ந்து

தன்அடிபற்றி
வந்த
தகுதிபடைத்த

பன்முகத்
திறமை கொண்ட
தம்பிகளை
எல்லாம்
ஓரணியில்
கோர்த்து

தளபதிகளால்
ஆன
கதம்ப மாலையாக்கியது

பேரறிஞர்
அண்ணாவின்
பெருங்
குணமும்..

பிறரை மதிக்கும்
பரந்த மனமும்..

கூடவே

"இதனை
இதனால் இவன்
முடிக்கும்
என்றாய்ந்ததனை
அவன்கண் விடல்' என

வள்ளுவன்
சொன்ன
வழிநடத்தலுமே

ஆம்..

மாற்றான் தோட்டத்து மல்லிகையின்
மனத்தை
மதித்தவர்

தன் தோட்டத்து
மலர்களின்
மகிமை போற்றிட
மறப்பாரோ..

அண்ணா..

தலைவன்
என்பவன்

தலைமை
தாங்குபவன்
மட்டுமல்ல

தலைவர்களை
உருவாக்குபவன்
என்பதை

தரணிக்கே
விளங்க வைத்த
தன்னிகரில்லாப்
பல்கலைக்கழகம்

**என்னநாஞ்**
**சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்